பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 12 ஞாயிற்றுக்கிழமை 24.04.2022 கதிர் 64

## குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை!

இனந்தெரியாத நபரால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை, பெலியத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாரபெரிய, நிஹிலுவ பிரதேசத்தில் நேற்றிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

☞ 2

# காலிமுகத்திடலுக்கு வழிமறிப்பு, தடை பிரதமரின் வீட்டுக்கு முன் ஆர்ப்பாட்டம்

## பல்கலைக்கழக மாணவர்கள் திரண்டனர்



காலிமுகத்திடல் வீதி மறிப்பு



விஜேராம மாவத்தையில் மக்கள் கூட்டம்

கொழும்பு கோட்டையிலிருந்து பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்த பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர்கள் சமூகத்தின் அணி காலிமுகத்திடலில் செல்வதற்கான பாதைகள் அனைத்தும் மூடப்பட்ட நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லம் அமைந்துள்ள விஜேயராம மாவத்தையை நோக்கி பெருந்த எடுப்பில் ஊர்வலமாகச் சென்று அங்கு திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறார்கள்.

☞ 2

## தமிழரசின் விசேட கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மார்டின் வீதியிலுள்ள தலைமை அலுவலகத்தில் விசேட கூட்டம் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இன்று காலை நடைபெற்றது.

இதன்போது மே தினக் கூட்டம் மற்றும் தந்தை செல்வா நினைவேந்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன

☞ 2



## மஹிந்த தேசப்பிரிய நீதி கோரி போராட்டம்



ரம்புக்கனைப் படுகொலைக்கு

தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்று அம்பலாங்கொடையில் போராட்டத்தில் ஈடுபட்டார்.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிராக ரம்புக்கனையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போது பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த குடும்பஸ்தருக்கு நீதி கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மஹிந்த தேசப்பிரியவின் சொந்த ஊர் அம்பலாங்கொடை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் சமூகத்தினர் நாளை சுகயீன விடுமுறைப் போராட்டம்

அதிபர், ஆசிரியர் சங்கங்கள் நாளை திங்கட்கிழமை சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

எரிபொருள் இன்மையால் மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் பாடசாலைக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

☞ 2

## பதவி விலகுமாறு மஹிந்தவுக்கு 'மொட்டு' எம்.பிக்கள் அழுத்தம்!

பிரதமர் பதவியிலிருந்து உடனடியாக விலகுமாறு மஹிந்த ராஜபக்ஷவிடம் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தலைவரே, நீங்கள் பதவி விலகி, புதிய பிரதமராக தினேஷ் குணவர்தனவை நியமியுங்கள். இல்லையேல் நம்பிக்கையில்லாப் பிரேரணை பெரும்

☞ 2



## கோட்டா அரசை எதிர்த்து கண்டி முதல் கொழும்பு வரை சஜித் அணி பேரணி!



### ஹரின் பெர்னாண்டோ எம்.பி. தகவல்

ஐக்கிய மக்கள் சக்தி கண்டியில் இருந்து கொழும்பு வரை 'சமகி ஜன பாகமன' என்ற பெயரில் எதிர்ப்புப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளது.

5 நாள்கள் நடைபெறும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியானது எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் கண்டியில் இருந்து ஆரம்பமாகி 30ஆம் திகதி

☞ 2

## வெட்கம் கெட்ட ராஜபக்ஷ அரசு உடன் பதவி விலக வேண்டும்!



### எதிரணி வலியுறுத்து

நாட்டு மக்கள் முன்னிலையில் வெட்கித் தலைகுனிந்துள்ள ராஜபக்ஷ அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக

☞ 2

## இந்தியா செல்ல முயன்ற 7 பேர் பேசாலையில் கைது

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக நாட்டில் வசிக்க முடியாத நிலையில் இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதற்காக முயற்சித்த இரு குடும்பங்களைச் சேர்ந்த 7 நபர்கள் பேசாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெரியவர்களும், நான்கு குழந்தைகளும் கைதுசெய்யப்பட்டு பேசாலை பொலிஸாரால் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில்

☞ 2

## கத்திக் குத்தில் ஒருவர் மரணம்

### சந்தேகநபர் தப்பியோட்டம்

கத்திக் குத்துக்கு இலக்காகி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த நபர் கொழும்பு, வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீதொட்டுமுல்ல பிரதேசத்தில் வெதுப்பகம் ஒன்றில் பணியாற்றிக்கொண்டிருந்த வேளை இந்தக்

☞ 2

## 28 இல் சபாநாயகர் தலைமையில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் எதிர்வரும் 28ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள உத்தேச அரசமைப்பு திருத்தச் சட்டம் தொடர்பாக இதன்போது ஆராயப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சின் முன்னேற்றம் தொடர்பில் நிதி அமைச்சரின் அறிக்கை எதிர்வரும் 4ஆம் திகதி ஆராயப்படவுள்ளது. இதற்கமைய அன்றைய தினம் முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 5.30 வரையில் நாடாளுமன்ற அமர்வு நடைபெறவுள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## பதவி விலகுமாறு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சவாலாக அமைந்துவிடும் என்றும் மஹிந்தவுக்கு அவர்கள் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ள டங்களான அமைச்சரவை உடனடியாக பதவி விலகி, சர்வகட்சி இடைக்கால அரசொன்றை அமைப்பதற்கு வழிவிட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான டலஸ் அழகப்பெரும ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் கடிதமொன்றை அனுப்பினார்.

இந்தக் கடிதம் ஊடகங்களில் வெளிவந்த பின்னர், ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் பிரதமரைச் சந்தித்து, பேச்சு நடத்தியுள்ளனர். அவ்வேளையிலேயே புதிய பிரதமராக தினேஷ் குணவர்தனவை நியமிக்குமாறு கோரியுள்ளனர்.

எனினும், ராஜபக்ஷக்களின் விசுவாசியான தினேஷைப் பிரதமராக ஏற்பதற்கு அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் 11 கட்சிகளின் கூட்டணி தயாரில்லை எனக் கூறப்படுகின்றது. அக்கட்சிகளின் தேர்வு டலஸ் அழகப்பெருமவாக இருக்கின்றது.

## இந்தியா செல்ல முயன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆஜர்படுத்தப்பட்டனர்.

குறித்த வழக்கை விசாரித்த மன்னார் நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எச். ஹைபதுல்லா ஒரு ஆண், இரு பெண்கள் உட்பட மூன்று பெரியவர்களையும் தலா 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதித்ததுடன், நான்கு பிள்ளைகளையும் பெற்றோர்களுடன் சேர்ப்பதற்கும் அனுமதி வழங்கியுள்ளார்.

## வெட்கம் கெட்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தவேளை அது தவறான நடவடிக்கை என எதிரணியாகிய நாம் சுட்டிக்காட்டினோம். திருத்தங்களை முன்வைத்தோம். ஆனால், எமது கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றைய அரசியல் நெருக்கடி நிலைக்கு இந்த 20ஆவது திருத்தமும் பிரதான காரணமாகும்.

நாடாளுமன்றம் வசம் இருந்த அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டன. இவ்வாறு ஜனாதிபதியிடம் அதிகாரங்கள் உள்ள நிலையில், நாடாளுமன்றத்தால் எவ்வாறு தீர்வைத் தேட முடியும் என்பதை சபாநாயகர் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது 20 ஐ இல்லாதொழிக்க முற்படுகின்றனர். இது காலம் கடந்த ஞானம். எனவே, புதிய அரசு அமைந்தால்தான் பிரச்சினைக்குத் தீர்வைத் தேட முடியும்.

இந்த அரசுக்கு சர்வதேச ஒத்துழைப்பு கிடைக்காது. எனவே, புதிய அரசு அமைந்தால்தான் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறக்கூடியதாக இருக்கும்.

புதிய அரசு அமைய வழிவிட்டு இந்த அரசு உடனடியாகப் பதவி விலக வேண்டும். - என்றார்.

## கத்திக் குத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொடூர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொஸ்லாந்தை, மக்கள்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வெதுப்பகத்தில் பணியாற்றி வந்த முன்னாள் ஊழியர் ஒருவர் குறித்த நபரைக் கத்தியால் குத்தியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கத்திக்குத்தை மேற்கொண்டவர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் வெல்லம்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கோட்டா அரசை எதிர்த்து ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொழும்பை வந்தடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாட்டுத்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, இந்த எதிர்ப்புப் பேரணியானது பின்வரும் 5 கட்டங்களைக் கொண்டதாக ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

முதலாம் கட்டம் - ஏப்ரல் 26 - கண்டி முதல் மாவனெல்லை வரை

இரண்டாம் கட்டம் - ஏப்ரல் 27 - மாவனெல்லை முதல் கலிகமுவ வரை

மூன்றாம் கட்டம் - ஏப்ரல் 28 - கலிகமுவ முதல் தனோவிட்ட வரை

நான்காம் கட்டம் - ஏப்ரல் 29 - தனோவிட்ட முதல் யக்கல வரை

ஐந்தாம் கட்டம் - ஏப்ரல் 30 - யக்கல முதல் பேலியகொடை வரை

மே முதலாம் திகதி கொழும்பில் மாபெரும் மேதினப் பேரணியுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் முடிவுக்கு வரும் என்று ஹரின் பெர்னாண்டோ எம்.பி. மேலும் கூறியுள்ளார்.

## ஆசிரியர் சமூகத்தினர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அத்துடன் பொதுமக்களின் கருத்துக்கு அரசு மதிப்பளிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

மேற்படி விடயங்களை முன்னிலைப் படுத்தி நாளை அதிபர், ஆசிரியர்களின் சுகயீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

## தமிழரசின் விசேட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து சிறிதரன் எம்.பி. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டார்.

## காலிமுகத்திடலுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராகக் கொழும்பு-காலிமுகத்திடலில் நடைபெற்று வரும் தன்னெழுச்சிப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இன்று பல்வேறு பேரணிகள் காலிமுகத்திடலை நோக்கி முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் பொலிஸார் கொழும்பின் முக்கிய பல வீதிகளில் வீதித்தடைகளை அமைத்துள்ளனர்.

இரும்புக் குழாய்களை வீதிகளில் புதைத்து, நிரந்தர வீதித் தடைகளைப் போல் அவற்றைப் பொலிஸார் அமைத்துள்ளனர்.

கொழும்பு, கோட்டையைச் சூழவுள்ள பகுதிகள் மற்றும் ஜனாதிபதி மாளிகை ஆகியவற்றுக்கு அருகில் பல இடங்களில் இவ்வாறு வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

எதிர்ப்புப் பேரணிகளில் வருவோர் குறித்த பகுதிகளுக்குள் நுழைவதைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அரசுக்கு எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் காலிமுகத்திடல் நோக்கிப் பேரணியை ஆரம்பித்தனர். எனினும், பொலிஸார் அவர்களை முன்னால் செல்ல விடாது வீதித் தடைகளைப் போட்டு வீதிகளை மூடியுள்ளனர்.

இதனால் பொலிஸாருடன் பல்கலைக்கழக மாணவர்கள் முரண்பட்டுள்ளனர்.

இதேவேளை, பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாகவிருந்து காலிமுகத்திடலை நோக்கிப் பேரணியாகச் சென்றவேளை லோட்டஸ் வீதிக்கருகே போடப்பட்டிருக்கும் வீதித் தடைக்கருகில் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இந்நிலையில், வீதியெங்கும் பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவத்தினரும் களத்தில் குவிக்கப்பட்டுள்ளனர்.

இன்று காலை முதலே காலிமுகத் திடலுக்கான சகல பாதைகளும் பொலிஸாரினால் மூடப்பட்டன. எல்லா முனைகளிலும் நூற்றுக்கணக்கில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். பேரணியாக வந்த பல்லாயிரக்கணக்கான பல்கலைக் கழக மாணவர்கள் கொழும்பு காலிமுகத் திடல் பகுதிக்குள் நுழைய முடியாத நிலையில் தங்கள் பாதையை மாற்றினார். கொழும்பு விஜேயராம மாவத்தையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இல்லம் அமைந்துள்ள பகுதியில் ஆயிரக்கணக் கில் திரண்ட அவர்கள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய அரசாங்கத்தையும் ஜனாதிபதியை உடனடியாக பதவி விலகக் கோரி அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்கள்

## குடும்பஸ்தர் ஒருவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபராலேயே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் நிஹிலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் வீட்டில் வைத்தே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொடர் கதையாகும் தவறுகள்

'நான்தான் பிரதமர், என்னை யாரும் அசைக்கவே முடியாது' – என்ற பிரதமர் ராஜபக்ஷவின் கூற்று எவ்வளவு தூரம் இங்கு தாக்குப் பிடிக்கும் என்பதை அடுத்து வரும் நாள்கள் தீர்மானிக்கும். அடுத்த ஓரிரு நாள்களில் இது தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்படும் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர். கட்டவிழும் அரசியல் போக்குகளின் பாதை அப்படித்தான் கட்டியம் கூறுகின்றன.

ஜனாதிபதிக்கும், அவரை பதவிக்குக் கொண்டு வந்த பிரதமருக்கும் இடையிலான இடைவெளி இன்று பெரும் முரண்பாடாக விரிசல் அடைந்துள்ளது. பிரதமருக்கு உடன்பாடில்லாத அமைச்சரவையைத் தம்மிஷ்டப்படி ஜனாதிபதி அமைக்கின்றார். அதனை ஆட்சேபித்து, அந்த அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வைப் பகிஷ்கரிக்க மட்டும்தான் பிரதமரால் முடிந்தது.

பிரதமரின் அமைச்சரவையில் யார் இருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும் அதிகாரம் ஏதும் பிரதமருக்கு கிடையாது. தற்றுணிவின்படி ஜனாதிபதி எதைச் செய்கின்றாரோ அதற்குத் தலையசைத்து இருப்பதைத் தவிர, பிரதம அமைச்சர் எனப்படுபவருக்கு அந்த அமைச்சரவை உருவாக்கம் தொடர்பில் எந்த அதிகாரமும் அவருக்கு கிடையாது. இதுவிடயத்தில்பிரதமரின்ஆலோசனைகளைத் தன்னும் கணக்கெடுக்க வேண்டும் என்று கூறும் அதிகாரம் கூடப் பிரதமருக்கு இல்லை.

19 ஆவது திருத்தத்தின் கீழ் அந்த அதிகாரங்கள் எல்லாம் பிரதமரிடம்தான் இருந்தன.

அவற்றைப் பிடுங்கி மீண்டும் ஜனாதிபதிக்கு ஏகபோக அதிகாரங்களை வழங்கிய 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முன் நின்று கொண்டு வந்தவரே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான். அதன் பிரதிபலனை அவர் இன்று அனுபவிக்க வேண்டியவராக இருக்கிறார் அவர்.

விழுந்தடித்து 19 ஆவது திருத்த ஏற்பாடுகளை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வந்து ஜனாதிபதியின் மேலதிக அதிகாரங்களைபிடுங்கும்கைங்கரியத்தைசெய்வதற்கு பிரதமர் மஹிந்தர் இப்போது துடியாய் துடிக்கிறார்.

அவரைப் பொறுத்தவரைத் தன் வினை தன்னைச் சுடுகிறது. அவ்வளவுதான்.

தாம் ஜனாதிபதியாக இருந்த போதும் தாம் நியமித்த பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தமது கட்டுப்பாடுகளை மீறி, எகத்தாளமாக நடந்துகொண்ட போதே மஹிந்தர் உசாரடைந்திருக்க வேண்டும். தன்னைத் திருத்தி இருக்க வேண்டும். அப்படியான ஒருவரை ஜனாதிபதியாக்கினால் தீட்டிய மரத்திலேயே அந்த பிரகஸ்பதி கூர் பார்ப்பார் என்பதை மஹிந்தர் உய்த்துணர்ந்திருக்க வேண்டும்.

இவ்வளவு நீண்ட அரசியல் பட்டறிவு மிக்க ராஜபக்ஷவின் கண்களை இரத்தபாசம் – சகோதர உறவு – மறைத்து விட்டது போலும்.

வளர்த்த கடா மார்பில் பாய்ந்த கதையாக, தன் பதவியை தக்க வைப்பதற்கு தமையனாரின் பிரதமர் பதவியை பறிக்க முனைகிறார்கள் கோட்டாபய. இதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்குச் செய்வதற்கு எதுவுமில்லை.

ஜனாதிபதிகோட்டாபயராஜபக்ஷவிரும்பினால்மஹிந்தரை பிரதமர் பதவியில் இருந்து எந்நேரமும் தூக்கிக் கடாசலாம்.

இடைக்கால, அரசு மாற்று அரசு, காபந்து அரசு, தேசிய அரசு, தற்காலிக அரசு என்று ஏதேனும் ஒன்றின் பேரில் புதிய பிரதமர் ஒருவரைக் கூட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்த நிமிடத்திலும் நியமிக்க முடியும். அப்படி நியமித்தால், 'நானே பிரதமர்; யாருக்கும் இங்கு இடமில்லை' என்ற மஹிந்த ராஜபக்ஷ வேறுவழியின்றி தமது மூடை முடிச்சுக ளைக் கட்டிக் கொண்டு அலரி மாளிகையில் இருந்து புறப்பட வேண்டியதுதான்.

பெரும்பாலும் அப்படி நடக்கத்தான் அதிக சாத்தியங்கள் உண்டு .

2009 மேயில் யுத்தத்தைப் பேரவலத்தை ஏற்படுத்திக் கொடூரமாக முடித்த பின்னர் கூட, தம்மைத் திருத்திக் கொள்வதற்கு பல வாய்ப்புகள் – சந்தர்ப்பங்கள் – மஹிந்தருக்குக் கிடைத்தன. அவற்றையெல்லாம் கோட்டைவிடும் வகையில் மாறி மாறித் தவறிழைத்தமையின் விளைவை அவர் இப்போது அனுபவிக்க வேண்டியவராக இருக்கிறார். அவ்வளவுதான்.

# பொருளாதார வேலைத்திட்டம்; தீர்வை விரைவில் சமர்ப்பிப்போம்

## அமைச்சர் தினேஷ் அறிவிப்பு



நாட்டை மீளக் கட்டியெழுப்பும் வகையிலான அரசாங்கத்தின் பொருளாதார வேலைத்திட்டம் தொடர்பான தீர்வை விரைவில் சமர்ப்பிப்போம் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நிதியமைச்சர் அலி சப்றி நாடு திரும்பியதும் நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் பொருளாதார பயணப் பாதை வேலைத்திட்டம்சமர்ப்பிக்கப்படும்என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் பொருளாதார வேலைத் திட்டம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். அந்தவகையில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் நட்பு நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனக் கூறினார்.

தற்போதைய சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான சிறந்த பொறிமுறை ஒன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# மக்கள் பேரெழுச்சிக்கான ஓர் இயக்கமாக முள்ளிவாய்க்கால் ஏற்பாட்டுக்குழு மாறட்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் கோரிக்கை

முள்ளிவாய்க்கால் ஏற்பாட்டுக் குழு இனி வரும் காலங்களில் மக்கள் எழுச்சி இயக்கமாக மாற்றப்பட்டு மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டும்

என வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாவதி ஆனந்தநடராஜா தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை அனுஷ்டிப்பது தொடர்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அழைப்பை ஏற்று நாம் அங்கு சென்றிருந்தோம். அந்தக் கூட்டம் சுமுகமாகவே நடைபெற்றது. அவ்வாறு இருந்தும் கூட தவறான செய்திகள் பரப்பப்பட்டன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுக்குழு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவு கூறுவதில் மட்டுமே ஈடுபடுகின்றனர். முள்ளிவாய்க்கால் ஏற்பாட்டுக் குழு, இனி வரும் காலங்களில் மக்கள் எழுச்சி இயக்கமாக மாற்றப்பட்டு மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டும் என்ற எண்ணம் எமக்குள் இருந்தது. அந்த வகையில் இந்த கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

ஆனாலும் அந்தக் கூட்டத்தில் ஒரு சில கருத்து வேறுபாடுகள் கூட்டத்தில் இடம் பெற்றாலும் கூட அவை வேறுவிதமாக சித்திரிக்கப்பட்டன. கூட்டத்தில் பங்கு கொண்ட ஒரு சிலரிடையே இடம்பெற்ற தனிப்பட்ட முரண்பாடு காரணமாக சில வாக்குவாதங்கள் இடம்பெற்றன. ஊடகங்களில் வெளியான அனைத்துசெய்திகளும்பொய்யானவையே.

--என்றார்.

# யாழ். போதனாவிலும் மருந்துகள் தட்டுப்பாடு

யாழ் போதானா வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துகள் உள்ளிட்டவைக்கு பெரும் தட்டுப்பாடுகள் நிலவுகின்றன என வைத்தியசாலை தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக நாடளாவிய ரீதியில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன. இந்நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையிலும் மருந்து தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளது.

போதனா வைத்தியசாலையில் 73 அத்தியாவசிய மருந்துகள், சத்திர சிகிச்சைக்குத் தேவையான 13 மருந்துகள், அவசரமாக தேவைப்படும் 53 வீதமான மருந்துகள் மற்றும் ஆய்வு கூடத்துக்குத் தேவையான 6 மருந்துகள் என்பன இல்லாது உள்ளன எனவும், வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மன்னாரில் பாரதி விழா



மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாரதி விழா நேற்று (சனிக்கிழமை) மன்னார் நகரசபை மண்டபத்தில் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மஹா தர்மகுமார குருக்கள் தலைமையில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரச அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல்,வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ராஜ மல்லிகை சிவசுந்தர சர்மா, வவுனியா தமிழ்ச் சங்கத்தின் ஸ்தாபகர் தமிழருவி த.சிவகுமாரன் உட்பட சர்வ மதத் தலைவர்கள், அழைக்கப்பட்ட பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதன் போது நடனம், கவியரங்கம் உள்ளிட்ட சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பதிலடியால் திணறும் ரஷ்யப்படை கிழக்கு உக்ரைனில் போர் தீவிரம்

## மரியுபோலில் 2வது பிரமாண்ட குழியில் 1,000 சடலங்கள்

கிழக்கு உக்ரைனை கைப்பற்ற ரஷ்யா, உக்ரைன் படைகள் தீவிர சண்டையிட்டு வருகின்றன. உக்ரைனின் கடுமையான பதிலடி தாக்குதலால் ரஷ்யா முன்னேறுவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது. உக்ரைன் மீது 2 மாதமாக போர் தொடுத்து வரும் ரஷ்யா, கெர்சன் மற்றும் மரியுபோல் நகரத்தை மட்டும் இதுவரை கைப்பற்றி உள்ளதாக அறிவித்துள்ளது. மரியுபோலில் அசோவ்ஸ்டல் இரும்பு தொழிற்சாலையை கைப்பற்ற மட்டும் ரஷ்யா போராடி வருகிறது. அதே நேரத்தில், போர் 2.0 திட்டத்தை வகுத்து கிழக்கு உக்ரைனில் உள்ள டான்பஸை கைப்பற்ற புதிய திட்டத்துடன் தனது படைகளை ரஷ்யா குவித்து தாக்குதல் நடத்தி வருகிறது.

ரஷ்ய படைகள் வாபஸ் பெற்ற புச்சா மற்றும் கீவ் புறநகர் பகுதிகளில் ஆயிரக்கணக்கான சடலங்கள் கொடூரமாக கொல்லப்பட்டு புதைக்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது மரியுபோலில் சுமார் 9,000 பேரை கொன்று ரஷ்ய ராணுவம் புதைத்து இருப்பது செயற்கைகோள் படங்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதேபோல், புதிய செயற்கைகோள் படங்கள் வெளியாகி உள்ளன. மரியுபோலுக்கு அருகிலுள்ள ஒரு நகரத்தில் சுமார் 147 அடியில் இரண்டாவது பிரமாண்ட புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில், 1,000 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மரியுபோலில் நடந்த சண்டையில் இதுவரை 21,000 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளன என கூறப்படுகிறது. இதில், 10,000 பேரின் சடலங்கள் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால், மேலும் ஆயிரக்கணக்கான சடலங்களை ரஷ்யா ராணுவம் புதைத்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்நிலையில், கிழக்கு பகுதியில் ரஷ்யாவுக்கு உக்ரைன் படைகள் கடுமையான பதிலடி தாக்குதல்களை நடத்தி வருவதால், அவர்களுடைய திட்டத்தில் தொய்வு ஏற்பட்டு, முன்னேற முடியாமல் தவித்து வருகின்றன. டான்பஸ் பிராந்தியத்தில் உள்ள டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளை முழு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ரஷ்யா தொடர்ந்து போராடி வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் உக்ரைன் படைகள் மேற்கண்ட 2 நகரங்களில் 8 ரஷ்ய தாக்குதல்களை முறியடித்து உள்ளன. ரஷ்யாவின் 9 தாங்கிகள், 18 கவசப் பிரிவுகள் மற்றும் 13 வாகனங்கள், ஒரு டேங்கர் மற்றும் மூன்று பீரங்கி அமைப்புகளை உக்ரைன் அழித்து உள்ளது. முக்கிய நகரங்களில் பல வாரங்களாக தெருச் சண்டை தொடர்கிறது. போபாஸ்னா, டொனெட்ஸ்க் நகரில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 7 பேர் காயமடைந்தனர்.



உக்ரைனின் கடுமையான பதிலடியால் கடல் மற்றும் வான் பரப்பை ரஷ்யாவால் முழுமையாக கைப்பற்ற முடியவில்லை. மரியுபோலை ரஷ்யா கைப்பற்றிவிட்டதாக அறிவித்தாலும், அங்கு தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது. இரும்பு தொழிற்சாலையில் சுமார் 2,000 உக்ரைன் வீரர்கள் பதுங்கு குழியில் இருந்து சண்டையிட்டு வருகின்றனர். இதனால், அந்த பகுதியே தீப்பிழம்பாக காட்சி அளிக்கிறது. பதுங்கு குழியில் உள்ள உக்ரைன் படைகளுக்கு ஹெலிக்கொப்டர் மூலம் ஆயுதங்கள் சப்ளை செய்யப்படுகிறன. டான்பாஸில் பெரும் முன்னேற்றம் ஏற்படாததால், 12 முதல் 14 உயரடுக்கு ராணுவ குழுக்களை மரியுபோலில் இருந்து டான்பாசுக்கு ரஷ்யா அனுப்பி உள்ளது. இதுவரை சுமார் ஒரு லட்சம் ரஷ்ய வீரர்கள் மற்றும் சிரியா மற்றும் லிபியாவில் இருந்து சண்டையிட்ட கூலிப்படையினர் உக்ரைனில் குவிக்கப்பட்டுள்ளனர். நாளுக்கு நாள் ரஷ்யா, தங்களது வீரர்களின் எண்ணிக்கையை அதிகரித்து வருகிறது.

### புடினுக்கு புற்றுநோயா?

ரஷ்ய அதிபர் புடின் புற்றுநோயுடன் போராடுகிறார் என்று மேற்கத்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. ஆனால் அவை வதந்திகள் என்று மற்றொரு தரப்பு கூறுகிறது. இதற்கிடையே தனது பாதுகாப்பு அமைச்சர் ஷோய்குடன், அதிபர் புடின் பேசும்போது, அவர் அமர்ந்திருக்கும் தோரணை மற்றும் அவரது முகம் மற்றும் கழுத்து ஆகியவை வீங்கியிருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பி உள்ளது. அமைச்சர் ஷோய்குவிடம் புடின் பேசும் போதும், தனது வலது கையை மேசையின் விளிம்பை இறுகப் பிடித்துக் கொண்டு, தனது காலை கீழே அழுத்தமாக வைத்துள்ளார். இதுதொடர்பாக இங்கிலாந்து ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், 'தன்னைப்பற்றிய கருத்துக்களை மக்கள் படிக்க வேண்டும் என்றும், தனக்கு நோய் பாதிப்பு இருப்பதாக வதந்திகள் பரவ வேண்டும் என்பதற்காக அவ்வாறு அமர்ந்துள்ளார்' என்று தெரிவித்துள்ளன.

### ஜி-20ல் ரஷ்யாவுக்கு சிக்கல் இல்லை

2014ல் உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்தபோது, ஆத்திரமடைந்த உலகத் தலைவர்கள் எட்டு தொழில்மயமான நாடுகளின் குழுவிலிருந்து ரஷ்யாவை வெளியேற்றினர். அதன்பின், ஜி-7 நாடுகளாக செயல்பட்டு வருகிறது. தற்போதைய ரஷ்யாவின் படையெடுப்பால் ஜி-20 நாடுகளில் இருந்து ரஷ்யாவை வெளியேற்றுவது குறித்து வாஷிங்டனில் ஆலோசனை நடந்தது. இதில், சீனா, பிரேஷில் மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகள், தொழில்துறை மற்றும் வளர்ந்து வரும் சந்தை நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜி-20ல் ரஷ்யாவின் உறுப்பினரை ஆதரிப்பதாக தெளிவுபடுத்தியுள்ளது. இதனால், ரஷ்யாவை வெளியேற்றுவது என்பது குறைவுதான்.

### ஐ.நா. செயலாளர் உக்ரைன் பயணம்

போர் நிறுத்தம் தொடர்பாக, வரும் 26ம் திகதி ரஷ்யா தலைநகர் மாஸ்கோவில் அதிபர் புடின் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஆகியோரை ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் சந்தித்து பேசுகிறார். இதேபோல், வரும் 28ம் திகதி உக்ரைன் தலைநகர் கீவ்வில் அதிபர் ஜெலன்ஸ்கி மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து பேசுகிறார்.

### கொந்தளித்த ரஷ்ய மக்கள்

கடந்த 14ம் திகதி கருங்கடலில் நிறுத்தப்படிருந்த ரஷ்யாவின் மிகப்பெரிய போர் கப்பல் மோஸ்க்வா மீது உக்ரைன் ராணுவம் ஏவுகணை வீசி தாக்கியதில் தீப்பிடித்து மூழ்கியதாக கூறப்படுகிறது. ஆனால், கப்பலில் இருந்த வெடி மருந்துகள் வெடித்ததில் தீவிபத்து ஏற்பட்டு, கடலில் மூழ்கியதாக ரஷ்யா தெரிவித்திருந்தது.

இதில் இருந்து அனைவரும் மீட்கப்பட்டனர் என ரஷ்யா தெரிவித்திருந்தது. ஆனால், கப்பலில் பணிபுரிந்த தங்கள் மகன்கள் வீட்டிற்கு வராதமை குறித்து குடும்பத்தினர் சரமாரியாக கேள்வி எழுப்பியதால், சுமார் ஒரு வாரத்திற்கு பின் ரஷ்யா ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், ஒரு வீரர் பலியாகினார் எனவும், 27 பேர் மாயமாகி உள்ளார் எனவும், 396 பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது. கப்பல் மூழ்குவதற்கு முன்பு அனைவரும் மீட்கப்பட்டனர் என தெரிவித்த தகவல் குறித்து ரஷ்யா எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை.

### ஒன்று கூடும் தலைவர்கள்

உக்ரைன் விவகாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து ஜேர்மனியில் 26ம் திகதி ஆலோசிக்க நேட்டோ மற்றும் நேட்டோ அல்லாத 40 நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி தெரிவித்துளார்.

உக்ரைனில் தனது படைகளை குவித்துள்ள ரஷ்ய அதிபர் புடினுக்கு அதிக வலியை தரக்கூடிய வகையில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க மேற்கு நாடுகள் ஆலோசித்து வருகின்றன. குறிப்பாக, எண்ணெய் மற்றும் எரிவாயு குறித்து தீவிர ஆலோசனை நடத்தி வருகிறது.

# நைஜீரியாவில் தீ விபத்து; 50 பேர் சாவு

## ஏராளமானோர் காயம்



நைஜீரியாவில் பெரும்பாலான மக்கள் வறுமையில் வாழும் நிலையில், பல இடங்களில் எண்ணெய் சுரங்கங்கள் சட்டவிரோதமாக அமைக் கப்பட்டு செயல்படுகின்றன. இந்நிலையில், ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய மசகு எண்ணெய் உற்பத்தி செய்யும் நைஜீரியாவின் தெற்கு மாநிலமான இமோவில் உள்ள சட்டவிரோத எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 50க்கும் மேற்பட்டோர் அடையாளம் காண முடியாத அளவுக்கு எரிந்து உயிரிழந்துள்ளனர் எனவும் ஏராளமானோர் காயம் அடைந்துள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

தென் மாநிலங்களான இமோ மற்றும் ரிவர்ஸுக்கு இடையேயான எல்லைப் பகுதியான எக்பெமா உள்ளூர் பகுதியில் உள்ள சட்டவிரோத எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் தீ விபத்து நிகழ்ந்ததில் இதுவரை 50க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர் என உள்ளூர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, அடையாளம் தெரியாத எரிந்த உடல்கள் அப்பகுதியில் சிதறிக் கிடக்கின்றன. இந்த பெரும் விபத்துக்கு பிறகு சட்டவிரோத எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் உரிமையாளர் தலைமறைவாக இருக்கிறார் என கூறப்படுகிறது.

மேலும், தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதனைத் தொடர்ந்து, நாட்டின் எண்ணெய் வளங்கள் திருடப்படுகின்றமையை தடுக்கும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக நைஜீரியாவில் உள்ள சட்டவிரோத சுத்திகரிப்பு ஆலைகளை சோதனை செய்து அழிக்க அரசாங்கம் இராணுவத்தை அனுப்பியுள்ளதாக கூறப்படுகிறது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# உள்ளூர் மொழிகளை வழக்காடு மொழியாக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்கிறார் தலைமை நீதிபதி ரமணா



சென்னையில் நேற்று நடைபெற்ற உயர்நீதிமன்ற விழாவில் தமிழக வழக்கறிஞர் அமைப்பில் அங்கம் வகிக்கும் வழக்கறிஞர்களது குடும்பங்களுக்கு உதவி வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி என்.வி.ரமணா கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்.

சிறு வயதில் நான் தமிழ்நாட்டுக்கு வந்தபோது நடந்த மொழிப் போராட்டம் நன்கு நினைவில் உள்ளது. மொழி, கலாச்சாரத்தை காப்பாற்றுவதில் தமிழர்கள் முன்னணியில் உள்ளனர். துரித உணவுகளைப் போல் மக்கள் துரிதமான நீதியையும் எதிர் பார்க்கிறார்கள்.

பில்டர் காபியில் இருந்து, இன்ஸ்டன்ட் காபிக்கு மக்கள் மாறிவிட்டனர். காலங்கள் மாறி விட்டன. 5 நாள் கிரிக்கெட்டில் இருந்து 20-20 கிரிக்கெட்டுக்கு மக்கள் மாறிவிட்டனர். தமிழ்நாடு பார் கவுன்சில்தான் நீதித்துறையின் அனைத்து விவகாரங்களையும் முதலில் முன்னெடுத்துச் செல்கிறது.

சமூக உண்மையை நீதிபதிகள் உணர்ந்து இருக்க வேண்டும். ஆக்கபூர்வமான தீர்வுகள் காணும்போது கண்மூடி, சட்டத்தை மட்டும் நீதிபதிகள் சார்ந்திருக்கக்கூடாது. மக்கள்தொகைக்கு ஏற்ப நீதிபதிகள் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டும். நீதித்துறைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்ய நீதித்துறையை மேம்படுத்த வேண்டியது அவசியம்.

தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உள்ளூர் மொழிகளை வழக்காடு மொழியாக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஒருவர் நீதித்துறையில் வருவதற்கு மொழி, இனம், சாதி, மதம், என எதுவும் தடையாக இருக்கக்கூடாது. பின்தங்கிய பகுதியில் இருந்து வரும் நீதிபதிகளால்தான் மக்கள் பிரச்சினைகளைப் புரிந்து தீர்க்க முடியும், என்று தனது உரையில் சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி என்.வி.ரமணா குறிப்பிட்டிருக்கிறார்.

விழாவில் கலந்து கொண்டிருந்த தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, சமூக நீதியை முன்னேற்றுவதில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டு அரசு நீதித்துறைக்கான இடம், கட்டடம், பணியாளர், மின்னனு வசதிகளை ஏற்படுத்தித் தந்து வருகிறது. தமிழ்நாட்டு அரசு தொடர்ந்து தனிநபர் உரிமையை பாதுகாத்தும் குரல் கொடுத்தும் வருகிறது, என்று தெரிவித்தார்.

சுப்ரீம் கோர்ட் நீதிபதி ராம சுப்பிரமணியன் நிகழ்வில் பேசும் போது, சென்னை உயர்நீதிமன்றில் வழக்குகள் விரைவாக முடிக்கப்பட்டு வருகின்றன. சாதனை படைக்கும் வகையில் அது உள்ளது. தமிழ்நாடு பார் கவுன்சில் இன்று அரசோடு சேர்ந்து ஒரு மிகப்பெரிய உதவியை வழக்கறிஞர்களுக்கு செய்ய முன் வந்து இருக்கிறது. எனவே அனைவருக்கும் என்னுடைய நன்றி, என்று தெரிவித்தார்.

## தற்போது சீரான மின் விநியோகம் வழங்கப்படுகிறது அமைச்சர் செந்தில் பாலாஜி டுவிட்டரில் அறிவிப்பு



தமிழ்நாட்டு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக சென்னை, தலைமை அலுவலகத்தில் செயல்பட்டுவரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம், சென்னை மாநகர மின் கட்டுப்பாட்டு மையம் மற்றும் 24 மணி நேர மாநில மின் நுகர்வோர் சேவை மைய மின்னகம் ஆகியவற்றில் தமிழக மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆய்வுகளை மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் தகவல் பகிர்ந்துகொண்ட அமைச்சர் செந்தில் பாலாஜி, மத்திய தொகுப்பிலிருந்து தமிழகத்திற்கு தரவேண்டிய 796 மெகாவாட் மின்சாரம் கடந்த இரண்டு நாள்களாக வழங்கப்படவில்லை என்றும், நம்முடைய மின் தேவையை பூர்த்தி செய்ய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் கூறினார்.

நிலைமையை சரி செய்வதற்கான மாற்று ஏற்பாடுகள் தமிழக முதல்வரின் வழிகாட்டுதலின் படி செய்யப்பட்டுள்ளன. ஓரிரு தினங்களுக்குள் தேவையான மின்சாரத்தைப் பெற்று முழுவதுமாக விநியோகம் செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

நமக்கு மத்திய தொகுப்பிலிருந்து கிடைக்கக்கூடிய 800 மெகாவாட் மின்சாரத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு ஒட்டு மொத்தமாக எல்லா மாநிலங்களிலும் மின்சாரத்தை கொள்முதல் செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன. ஓரிரு நாள்களுக்குள் தமிழகத்தில் மின்தடை, மின்வெட்டு சரி செய்யப்படும். முழு மின் உற்பத்தியை அதிகரித்து மின் விநியோகம் சீரான முறையில் வழங்கப்படும். 17,500 மெகாவாட் வரும் என கணக்கிடப்பட்டு அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும், என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அதன்பின்னர் அமைச்சர் செந்தில் பாலாஜி நேற்று இரவு தனது டுவிட்டர் பக்கத்தில் மின் விநியோகம் சீராகிவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

796 மெகாவாட் மத்திய தொகுப்பு மின்சாரம் வராததால், மின் விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய நடவடிக்கையால், தகுந்த மாற்று ஏற் பாடுகளும் மாநில மின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டும், இன்று மாலை முதல் சீரான மின் விநியோகம் வழங்கப்படுகிறது, என அவர் டுவிட்டர் தகவல் வெளியிட்டுள்ளார்.

## சகல துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் டெக்னோ நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோள்



சென்னை கிண்டி அண்ணா பல்கலைக் கழகத்தில் அகில இந்திய உற்பத்தியாளர்கள் அமைப்பு சார்பில் டெக்னோ 2022 நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு, கல்வி, தொழில் மற்றும் சுகாதாரத் துறைக்கான தமிழ் குடிமகன் விருதுகளை வழங்கினார். தொழிற்துறையினருக்கு 8 பிரிவுகளின் கீழ் விருதுகளை அவர் வழங்கினார்.

விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசுகையில், எந்த துறையும் தனித்துறையாக செயல்பட முடியாது. ஒவ்வொரு துறையும் தேவையான நேரத்தில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும், என்றார். கல்வி, தொழில் மற்றும் உற்பத்தித் துறைகள் இணைந்து செயல்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது. தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் தகுதிகளை மாணவர்களுக்கு பல்கலைக் கழகங்கள் வழங்க வேண்டும். தமிழ்நாட்டு பொறியியல் மாணவர்களை பன்னாட்டு நிறுவனங்கள் பணிக்கு தேர்வு செய்கின்றன. சிறந்த முதல்வர் ஸ்டாலின் என்பதைவிட, சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்பதிலேயே எனக்கு மகிழ்ச்சி. நமது சாதனைகளுக்கு சமூக நீதிக் கொள்கையே முக்கிய காரணம், என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.



## கொரோனா நிலைமை குறித்து புதன்கிழமை முதல்வர்களுடன் பிரதமர் மோடி ஆலோசனை

கொரோனா நிலைமை குறித்து வருகின்ற புதன்கிழமை பிரதமர் மோடி முதல்வர்களுடன் ஆலோசனை நடத்த உள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் 24 மணி நேரத்தில் 2,527 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் மொத்த எண்ணிக்கை 4,30,54,952 ஆக உயர்ந்துள்ளது.

தொற்று பாதிப்புக்கு ஒரே நாளில் 33 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா தொற்றுடன் சிகிச்சை பெறுபவர்கள் எண்ணிக்கை 15,079 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் கொரோனாத் தொற்று மீண்டும் அதிகரித்து வரும் நிலையில், அது குறித்து இந்தியப் பிரதமர் மோடி வருகிற புதன்கிழமையன்று முதல்வர்களுடன் காணொலி தொழிநுட்பம் மூலம் ஆலோசனை நடத்துவார், என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது குறித்து மத்திய சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷன் விளக்கம் அளிப்பார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

# சிவராமின் நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் 29 இல் நினைவேந்தல்

(கு.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு. ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளரும், ஆய்வாளருமான டி.சிவராமின் நினைவு தினத்தினை முன்னிட்டு, எதிர்வரும் 29 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மட்டக் களப்பில் நினைவேந்தல் நிகழ்வும், கவனவீர்ப்புப் போராட்டமும் மேற் கொள்ளப்படவுள்ளன.



மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடக வியலாளர் ஒன்றியத் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு காந்தி பூங்கா வளாகத்திலுள்ள – படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் நினைவாக அமைக்கப்பட்டுள்ள – நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்தப்பட்டு, அதனைத் தொடர்ந்து கவனவீர்ப்புப் போராட்டமும் ஒழுங்கு செய் யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டமானது இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிவேண்டியும், நாட்டில் இடம்பெற்று வரும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறையினைக் கண்டித்தும், தமிழ் மக்களின் உரிமையினை அங்கீகரிக்கக் கோரியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நினைவேந்தல் நிகழ்வு மற்றும் கவனவீர்ப்பில் அனைத்து ஊடகவியலாளர்களையும், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோரையும், அரசியல்வாதி களையும், மனித உரிமைச் செயற்பாட்டாளர்களையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டு, ஊடக அமையம் என்பன ஒன்றிணைந்து கோரிக்கை விடுத்துள்ளன.

# ஊடகர் மோகனதாஸ் நோயினால் பிரிந்தார்



(நூருல் ஹுதா உமர்)

துறைநீலாவணையினைச் சேர்ந்த ஆசிரியரும் ஊடகவிய லாளருமான பாக்கியராசா மோகனதாஸ் நேற்று இரவு இறைபதம் எய்தினார்.

இளம் ஊடகவியலாளரான இவர் குறுகிய காலத்தினுள் ‘தமிழன்’ பத்திரிகையின் வீரமுனை நிருபராக , ‘வீரகேச ரி’யின் களுவாஞ்சிகுடி நிரு பராகவும், ‘தினகரன்’ பத்திரிகை யின் மண்டூர் குறுப் செய்தி யாளராகவும் பணியாற்றியவர்.

இலங்கையில் வெளி வருகின்றபிரபலநாளிதழ்களில் பலவருடகாலமாககட்டுரைகள், அரசியல்வாதிகளின்பேட்டிகள், கலைஞர்களின் படைப்புக்கள் என பல்வேறு விடயங்களை வெளிக்கொண்டு வந்த பல் துறைக் கலைஞரான இவருக்கு பல வருடங்களுக்கு முன்னர் கிழக்கு மாகாண இளம் ஊடக வியலாளர் விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சை பலனின்றி சனிக் கிழமை இரவு உயிரிழந்துள் ளார். அன்னாரின் இறுதிக் கிரியை இன்று ஞாயிற்றுக் கிழமை துறைநீலாவணை பொது மயானத்தில் நடை பெறுகின்றது.

# காரைதீவு கலாசார விளையாட்டு விழாவில் கல்விச்சாதனையாளர்களுக்கு கௌரவம்




(காரைதீவு நிருபர் சகா)

சுபகிருது சித்திரை வருடப்பிறப்பை முன்னிட் டும், காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 39 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், காரைதீவு விளையாட்டுக் கழகமும், விபுலாநந்தா சனசமூக நிலையமும், காரைதீவு பிரதேச செயலகம் மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் இணை அனுசரணையுடன் அண்மையில் நடத்திய 24 ஆவது மாபெரும் கலாசார விளையாட்டு விழாவில் கல்விச்சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது, உயர்தரப் பரீட்சையில் வைத்திய துறைக்கும், பொறியியல்துறைக்கும் தெரிவானவர் களும், கலைத்துறையில் 3ஏ சித்திபெற்றவர்களும், சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்திபெற்ற மாணவர்களும், காரைதீவு விளையாட்டு கழகத்தி னரால் பகிரங்கமாக மைதானத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

இச் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வில் அதிதிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.





# புற்றுநோய் விழிப்புணர்வு பற்றிய கருத்தரங்கு பெரியகல்லாறில்!

(கு.கிருபாகரன்)

மட்டக்களப்பு புற்றுநோய் சங்கத்தின் ஏற்பாட்டில் பெரிய கல்லாறு பிராந்திய வைத்தி யசாலையில் புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று இடம் பெற்றது.

மட்டக்களப்பு புற்றுநோய் சங்கத்தின் செயலாளர் வைத்தி யர் கே.மயூரேசன் தலைமை யில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கின் வளவாளராக பெண்ணியல் மற்றும் மகப் பேற்று சத்திரசிகிச்சை நிபுண ரும், சிரேஷ்ட விரிவுரையா ளரும், முன்னாள் கிழக்கு பல் கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதியும், இலங்கை புற்று நோய் சங்கத்தின் மட்டக்களப் புக் கிளைத் தலைவருமான கே.ஈ.கருணாகரன் கலந்து கொண்டு மார்பகப் புற்றுநோய் தொடர்பாக விவரித்தார். இதனை அலட்சியமாக எண்ணி, வைத்தியரை நாடா மல் இருப்பதனால் ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் தொடர்பா கவும் அவர் விரிவாக எடுத்துக் கூறினார்.

இலங்கை புற்றுநோய் சங்க மட்டக்களப்பு கிளைப் பொருளாளர் பி.முத்துலிங்கம், வைத்தியசாலையின் நண்பர்கள் அமைப்பின் தவிசாளர் சா.திருநாவுக்கரசு உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இக்கருத் தரங்கில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்கள் உட் பட பொதுமக்களுக்கு புற்று நோய் தொடர்பான கையேடு ஒன்றும் வழங்கி வைக்கப் பட்டது.





# திருக்கோயில் ஆலய முன்றிலில் போர்த்தேங்காய் விளையாட்டு

(காரைதீவு நிருபர் சகா)

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்றான போர்த்தேங்காய் உடைக்கும் திருவிழா திருக்கோயில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய முன்றிலில் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேசபொது மக்களின் ஏற்பாட்டில் இப் பாரம்பரிய நிகழ்வு இடம்பெற்றது..

மேலும் இளைஞர்களுக்கான கயிறு இழுத்தல், சிறுவர்க ளுக்கான பணிஸ் உண்ணுதல் ,பலூன் உடைதல்,வாயில் தேசிக்காய் ஏந்தி நடத்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

வெற்றி பெற்றவர்களுக்கு திருக்கோவில் ஸ்ரீ முருகன் ஸ்ரோஸ் நிதி அனுசரணையில் பரிசுகளும் வழங்கப்பட்டன.

# இலங்கை விவகாரத்தை வைத்து காய்நகர்த்தும் இந்தியா, சீனா?

இலங்கைக்கு மேலும் 200 கோடி டொலர்கள் நிதி உதவியை வழங்க இந்தியா தயாராக உள்ளது.

அத்துடன் இலங்கை விடயத்தில் இந்தியா அண்மைய ஆண்டுகளில் சீனாவிடம் இழந்த இடத்தை புதுடில்லி மீண்டும் பெற முயற்சிக்கிறது என ரொய்ட்டர்ஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரத்துக்குப் பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டு, அதன் முதல் கடனைத் திருப்பிச் செலுத்தாத நிலையில் இருக்கும் இலங்கை, இந்தியா மற்றும் சீனா உள்ளிட்ட நட்பு நாடுகளிடம் உணவு, எரிசக்தி உட்பட நிதிக்கடனையும் கோரி வருகிறது.

ஆசிய ஜாம்பவான்களாக இருக்கும் சீனாவும், இந்தியாவும் ஏற்கனவே பல கோடிக் கணக்கான டொலர்களை நிதி உதவியாக வழங்கியுள்ள.

இந்நிலையில், 'நாங்கள் நிச்சயமாக அவர்களுக்கு உதவ விரும்புகிறோம், மேலும் அதிக இடமாற்று வரிகள் மற்றும் கடன்களை வழங்கத் தயாராக இருக்கிறோம்' என இலங்கையுடனான பல்வேறு கலந்துரையாடல்களை அறிந்த இந்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதுடில்லியில் உள்ள ஒரு மூத்த அரசாங்க அதிகாரி, இலங்கைக் கடனைச் செலுத்த முடியாது என அறிவித்தமை கவலையளிக்கிறது.

எனினும், தெற்காசியாவை மையமாகக் கொண்ட ஆசிய கணக்குத்தீர்வாக ஒன்றியத்துக்குச் செலுத்த வேண்டியவை போன்ற சுமார் 200 கோடி டொலர்கள் நிலுவையைப் பெறுவதற்கு இந்தியாவின் உதவியை நாடுவதாகவும் இந்தியாவிடமிருந்து அதற்கு நேர்மறையான பதில் கிடைத்ததாக இந்திய வட்டாரம் மேலும் கூறியது.

இந்த விடயத்துடன் தொடர்புடைய அனைத்துத்தரப்பினரும் விடயங்களைக குறிப்பிட்டபோதும் தமது பெயர்களை வெளியிடுவதற்கு மறுத்துவிட்டனர் என்று ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இந்திய அரசாங்கம் மற்றும் அதன் மத்திய வங்கி ஆகியன இலங்கையின் வெளியுறவு மற்றும் நிதி அமைச்சுக்கள் கோரிக்கைகளுக்கு உடனடியாகப் பதிலளிக்கவில்லை.

இந்தியா இதுவரையில் இலங்கைக்கு 190 கோடி டொலர்களைக் கடன்கள் மற்றும் நாணய பரிமாற்றங்களில் வழங்கியுள்ளது. எரிபொருளுக்காக மேலும் 50 கோடி டொலர்களைக் கடனாக இலங்கை கோரியுள்ளது.

சீனா 130 கோடி டொலர்கள் சிண்டிகேட்டட் கடனையும் 150 கோடி யுவான் மதிப்பிலான நாணயச் செலுத்தலையும் நீடித்துள்ளது. மேலும் கடன்கள் மற்றும் வட்டிகளை மீளச் செலுத்துவதைத் தாமதப்படுத்தல் ஆகியவற்றுக்கான பேச்சுகள் நடந்து வருகின்றன.

இந்தியாவின் அண்டை நாடான இலங்கை சீனாவை நம்பியிருப்பதைக் குறைப்பதற்கு புதுடில்லி ஆர்வமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை சீனாவுக்கு சுமார் 350 கோடி டொலர்கள் கடன்களை மீளச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது.

இலங்கைத்தீவில் அமைக்கப்பட்ட மொத்த துறைமுகங்கள் மற்றும் சாலைகளில் 10.8 சதவீதமானவற்றை பீஜிங் பங்களிப்பைச் செய்துள்ளது.

இவ்வாறான நிலையில் 'அவர்கள் (இலங்கை) சீனாவிடமிருந்து கடன் அளவைக் குறைக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம், மேலும் நாங்கள் வலுவான பங்காளிகளாக மாற விரும்புகிறோம்' என இந்திய வட்டாரம் தெரிவித்தது.

இலங்கையின் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, அத்தியாவசிப் பொருள்களான சீனி, அரிசி மற்றும் கோதுமை கொண்ட கப்பல்களையும் இந்தியா இலங்கைக்கு அனுப்பியிருந்தது. இலங்கை பீஜிங்கில் தங்கியிருப்பதை புதுடில்லி முறையாகக் குறைக்கவில்லை என்றாலும், இலங்கையர்களுக்கு உதவி வழங்குவதற்கான நிபந்தனைகளில் சீனாவை விட இந்தியா சிறந்த நிலையில் உள்ளது என்பதை உணரமுடிந்தது என இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில், இலங்கை கடந்த திங்கட்கிழமை சர்வதேச நாணய நிதியத்துடன் கடன்களைப் பெறுவதற்கான பேச்சுகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது. இதேவேளை, அத்தியாவசியமான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான அந்நியச் செலாவணி இருப்புக்களைத் தக்கவைத்துக்கொள்வதற்கு இலங்கையின் மத்திய வங்கி வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவது சவாலானது மற்றும் சாத்தியமற்றது' என அறிவித்துள்ளது.

அதேநேரம், எரிபொருள், உணவு, மின்சாரம் மற்றும் மருந்துப் பற்றாக் குறைக்கு எதிராக ஒரு மாதத்துக்கும் மேலாக இலங்கையின் நாலாபுறமும் வீதிப் போராட்டங்கள் உத்வேகமெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடலுணவுகளின் விலை வவுனியாவில் அதிகரிப்பு

*எரிபொருள் விலையேற்றம் காரணமாக வவுனியாவில் கடலுணவுகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன எனக் கடலுணவு வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.*

*மன்னார், திருகோணமலை, முல்லைத்தீவு போன்ற கடல்களில் பிடிக்கப்படும் கடலுணவுகள் வவுனியாவிற்குக் கொண்டு வரப்படுகின்றன.*

*இதன் காரணமாக அங்கிருந்து கொண்டுவரப்படும் ஒரு கிலோ விளைமீன் 1,000 ரூபாவாகவும் பாறை மீன் 1,200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றது.*

*முரல் 600 ரூபாவாகவும் சீலா 1,000 ரூபாவாகவும் கணவாய் 1,200 ரூபாவாகவும் சின்ன இறால் 1,200 ரூபாவாகவும் பெரிய இறால் 1,800 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.*

*இதேவேளை நண்டு 1,600 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் அதேவேளை சால மீன் 300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.*

## பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய அறுவர் புதுக்குடியிருப்பில் கைதாகினர்

புதுக்குடியிருப்பில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் குற்றத்துக்குப் பயன்படுத்திய வாள் மற்றும் கொள்ளையிடப்பட்ட நகைகள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் கடந்த வாரத்தில் இடம்பெற்ற மூன்று கொள்ளைச்சம்பவங்களுடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்களையே புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

கடந்த 16 ஆம் திகதி தேவிபுரம் பகுதியில் வாள்வெட்டு தாக்குதல் நடத்தி வயோதிபத் தம்பதிகளைக் காயப்படுத்திவிட்டு தாலியைக் கொள்ளையடித்து சென்றமை மற்றும் விசுவமடு பகுதியில் சங்கிலி பறிப்பு, புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் நகை கொள்ளை என வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு கொள்ளையிட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கொள்ளையிட்ட தங்க நகைகளும் மீட்கப்பட்டுள்ளன. இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒருவரைத் தேடி வருவதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். கொள்ளையிடப்பட்ட நகைகள் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளமையுடன் விற்ப னையை மேற்கொண்ட பெண் ஒருவர் உள்ளிட்ட 6 பேரையும் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# வலி.தென்மேற்கு பிரதேச சபையில் கோட்டாவின் உருவப்படம் எரிப்பு!







வலி தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி அளவில் வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மண்டபத்தில் இடம்பெற இருந்த நிலையில் சபைக்கு வருகை தந்த உறுப்பினர்கள் மற்றும் சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபனேசன் ஆகியோர் சபையின் முன்பாக காலை 9 மணியளவில் காவி தரித்த சிலுவையுடன் இன மத பேதமின்றி இரத்தம் படிந்த சிவப்பு பட்டிகளைக் குறியீடாக அணிந்து நாட்டின் தற்போதைய அரசின் எதேச்சதிகார நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டை வெளிப்படுத்தும் முகமாக பெரல்களில் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவின் படங்களைக் கட்டி தொங்கவிட்டு கோட்டாபயவின் உருவப்படத்துக்கு சபையின் முன்பாக தீயிட்டு தமது கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதன்போது தென்மேற்கு வலி.தென்மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் உட்படத் தவிசாளர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.